

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், உலக சுற்று சூழல் தினத்தையொட்டி, அரசு ஊழியர்களுக்கு மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (06.06.2016) வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ்.இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 330/2016 நாள்: 06.06.2016

## பத்திரிக்கை செய்தி

## உலக சுற்றுச்சூழல் தினம் ஜூன் 5

கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து துறை விளிம்பு நிலை அலுவலர்களுக்கான பயிற்சி தமிழ்நாடு அரசு பணியாளர் பயிற்சி மையமான சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சி மைத்தின் மூலம் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. அப்பயிற்சியில் பயிற்சி பெற்ற அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து சமூக பணியாற்றும் பொருட்டு **”குமரிமுனைக் கூடல்”** என்ற அமைப்பை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவ்வமைப்பு மூலம் பல்வேறு சமூக, வழிப்புணர்வு பணிகள் செய்யப்பட்டுவருகிறது. மாதம்தோறும் ஒவ்வொரு பணிகள் திட்டமிடப்பட்டு செயலாக்கப்பட்டுவருகிறது. அதன் ஒரு நிகழ்வாக இம்மாதத்தில் உலக சுற்றுச்சூழல் தினத்தை கொணடாடும் விதமாக 1200 பலன்தரும் மரக்கன்றுகளை அரசு ஊழியர்களின் இல்லங்களில் நட்டு பராமரிக்க வழங்க தீர்மானிக்கப்பட்டது. அதன்படி இன்று (06.06.2016) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்களால் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் லூயிஸ் பிரெய்லி கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்ற திங்கள்கிழமை குறைதீர்க்கும் நாளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி துவக்கி வைக்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகள் குமரிமுனை கூடல் அமைப்பு மற்றும் அரசு அலுவர்களால் செய்யப்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.